3. தகவல் கோரல்

(அ) வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டித்தது

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை கூடிய* Business Advisory Committee-*யில் 11-00 மணியானால், கேள்விகள் பாக்கியிருந்தாலுங்கூட, அதனை நிறுத்திவிட்டு இதர அலுவல்களை எடுத்துக்கொள்வது என்று முடிவு எடுத்து இருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது). இப்போது என்ன முடிவு சொன்னாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன். அதிலே நான் குறுக்கிடவில்லை...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்குப் போதுமான நேரம் இருக்கிறது. அவையின் இன்றைய அலுவல்களை நடத்துவதற்கு நமக்குப் போதுமான நேரம் இருக்கிறது.*

திரு. துரைமுருகன்: *அப்படியானால், இன்றைக்கு மட்டும் விதிவிலக்கு; மற்ற நாட்களில் 11 மணிக்கு நிறுத்திவிடுவீர்கள். அப்படித்தானே?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைப் பார்க்கலாம். அதுகுறித்து என்னுடைய அறையிலே பேசுவோம்.*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *சென்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தினுடைய முடிவு சென்ற கூட்டத்திற்குத்தான் பொருந்தும். இந்தக் கூட்டத்திற்கு இன்னும் முடிவு எடுக்கவில்லை. எனவே, பேரவைத் தலைவர் அவர்களுக்கு விதியிலே அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி நீட்டிப்புத் தருகிறார்.*

திரு. துரைமுருகன்: *சபாநாயகருக்கு, எந்த முடிவையும், எதையும் எந்த நேரத்திலும் அறிவிக்கக்கூடிய அதிகாரம் உண்டு. அந்தை நான் மறுக்கவில்லை. அது வேறு விஷயம். ஆனால் போன* Business Advisory Committee-*யின் முடிவு போன கூட்டத் தொடருடன் முடிந்துவிட்டது என்று சொல்ல முடியாது. அப்படியானால், போன முறை எடுத்த பில்லை இப்போது எடுக்க மாட்டீர்களா? இதற்கு நிதி அமைச்சர் அவர்களுடைய வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. சபாநாயகருடைய தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.*